மலர் : 19
இதழ் : 12

# அடித்தளம்

அன்பியங்களின் தொடர்பிதழ்

குழித்துறை மறைமாவட்டம்

டிசம்பர் 2024

தனிச்சுற்றுக்கு மட்டும்



## இயேசுவின் பிறப்பு
## மனுகுலத்தின் மீட்பு

## இயக்குநரிடமிருந்து......

# இயேசுவின் பிறப்பு மனிதரின் மீட்பு

இறையேசுவின் அன்புமிக்க சகோதரமே !

இயேசுவின் பிறப்பை எதிர்நோக்கியிருக்கும் அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு திருவிழா வாழ்த்துக்களை மகிழ்வோடு உரித்தாக்குகிறேன். மழை வேண்டும் என்று வானத்தைப் பார்த்து காத்துக்கொண்டிருக்கும் நிலத்தைப் போல, தாயின் கருவறையில் கருவாகி, உருவாகி, தாயின் முகம் காணாமல் உள்ளத்தின் உணர்வான அன்பை அனுபவித்து, ஈரைந்து மாதங்கள் கழிந்து என்று காண்பேன் என்னைக் கருவில் சுமந்த தாயை என்று எதிர்பாத்திருக்கும் கருவைப்போல, நாமும் எதிர்பார்த்து காத்திருக்கும் பெருவிழாவே இறைமகனின் பிறந்த நாள். அன்று, இயேசுவின் பிறப்பு மனித குலத்துக்கு மீட்பளிக்கும் கொண்டாட்டமாகவும், ஏரோதுக்கு திண்டாட்டமாகவும் அமைந்தது.

இப்புவியில் உருவெடுத்து மனிதரான பின், மழலைப்பருவத்தில் பிறவிப் பாவத்தை விட்டு ஒளியைப் பெற்று திருஅவையின் அங்கமாக வாழ அழைக்கும் திருமுழுக்குக் கொண்டாட்டத்திருந்து முதுமை பருவம் வரை எத்தனை எத்தனையோ கொண்டாட்டங்கள். கொண்டாட்டம் என்றாலே சிந்தையில் தோன்றுவது ஆடம்பரமும், அலங்காரமும் தான். ஆனால் கொண்டாட்டம் என்றால் என்ன என்பதை, ஏழ்மையின் உருவாய், குடில் பிறந்து, தங்க இடமின்றி பரிதவித்த அனுபவமான இறைமகன் இயேசுவின் பிறப்பு நமக்கு உணர்த்துகிறது.

இயேசுவின் பிறப்பைக் கொண்டாடும் நாம் கிறிஸ்துமஸ் விழாவின் அடையாளமான குடிலை நம் மனக்குடில் வடிவமைப்போம். அவரை எதிர்நோக்கும் ஒளியை அடையாளமாக்கி நம்மனத்தை எதிர்பார்ப்பு, நம்பிக்கை, மகிழ்ச்சி, அன்பு, இறைவாழ்வு என்னும் எண்ணங்களால் ஆயத்தப்படுத்த நம் அகத்தில் ஒளி ஏற்றுவோம். ஞானியர் அளித்த பரிசுகளின் அடையாளமாக நம்மோடு வாழும் தேவையிருப்போரை தேழச்சென்று உதவிசெய்வோம். அதற்கும் மேலாக இறைவனின் படைப்பில் மறு கிறிஸ்துக்களான நாம் முழுமனித இயல்போடு இப்புவியில் வாழ்வோம். இதுவே கிறிஸ்துமஸ் விழா கொண்டாட்டமாக நம் உள்ளங்களில் நிலைக்கட்டும்.

மனித மனங்களும். உதவும் கரங்களும் இணைந்திருந்து செயல்படும் காலம் வரை கிறிஸ்துமஸ் என்ற விழாவிற்கான அர்த்தம் இப்பூமியில் நிலைத்திருக்கும். இறைமகனின் மனிதரை மீட்க அளித்த ஒளி நிலைத்திருக்கும். கருணையும் மனிதநேயமும் செழிக்கும் இடங்களில், மனங்களில் எல்லாம் கிறிஸ்துமஸ் விண்மீன் கண்சிமிட்டும். குழந்தை இயேசுவின் திருமுகம் மலந்து ஒளிவீசும். 'நல்மனம் கொண்டோர் அனைவருக்கும் அமைதி' என்று வாழ்த்தும் வானவரின் பாடல் ஒக்கும்.

விண்ணக ஒளியாம் இம்மானுவேன் வரவால்  
மண்ணோரில் அமைதி உதித்த நாள்  
ஏழைக்கோலம் பு+ண்டு வந்த பாலகன்  
ஏழையரின் உள்ளத்தில் மலர்ந்த நாள்  
மார்கழியில் வெற்றெடுத்த மனிதநேயம்  
மாந்தரின் ஏக்கத்தை நிறைவேற்றும் நாள்  
வானோர் வாழ்த்தில் உன்னதத்தில் உறைபவர்  
மனிதனாய் புவிதனில் அவதரித்த நாள்  
இருளை நீக்கி ஒளியை ஏற்ற வந்த பாலனுக்கு  
பாரெங்கும் கொண்டாடும் பிறந்த நாள்

பாரெங்கும் திருவிழா, இறைமகன் இயேசுவின் பிறந்தநாள். கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடும் நாம், நம் வாழ்விலும். நம் இல்லங்களிலும். நம் உள்ளங்களிலும் குடில் பிறந்த இயேசு அன்பும், பண்பும், பரிவும், இரக்கமும், அமைதியும் என்றும் நிலைத்திருக்க இயேசுபாலன் நமக்கு காட்டிய பண்புகளை நம் அடுத்திருப்போரில் வாழ்வாக்குவோம். வறுமையில் திண்டாடுவோருக்கு கரம் கொடுத்து உதவுவோம். நாம் செய்யும் சேவைகளால் இயேசுவின் பிறப்பு மனிதராகிய நம்மை மீட்படையச் செய்யட்டும் என்று மனமார வாழ்த்துகிறேன்.

பணி தோழமையில்

அருட்பணி **M. ஆல்வின் விஜய்**  
இயக்குநர், அன்பிய பணிக்குழு

# 1 அவர் குடிலில் இல்லை

அருட்சகோதரர். ப. பிரேம் ததேயு
புனித சவேரியார் ஆலயம், செந்தறை

போர் மேகங்கள் உலகை சூழ்ந்திருக்க அகதிகளின் அழுகுரல் இன்னும் விண்ணைப் பிளந்து கொண்டிருக்க பல சாதிய கொடுமைகள் சகஜமாய் அரங்கேற்ற மீண்டும் ஒரு கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாடக் காத்திருக்கின்றோம். இத்தகைய சூழலில் பாலன் இயேசுவை நாம் எங்கே தேடிக்கொண்டிருக்கின்றோம்?

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆடம்பரங்களை விட்டுவிட்டு ஏழ்மையின் உருவமாக மாடுகள் அடையும் குடிலில் பிறந்த இயேசுவை, இன்று பல இலட்சங்கள் செலவு செய்து நாம் அமைக்கின்ற ஆடம்பர குடில்களில் பிறக்க வேண்டும் என்று ஆவலோடு எதிர்பார்ப்பது வீண்.

இயேசு விரும்புவது ஆடம்பர குடில்களை அல்ல. மாறாக, எளிமையான நம்முடைய இதயத்தை. நம் இதயத்தில் அவர் பிறக்க வேண்டும் என்றால் நாம் அவரை ஏழைகளிடம் தேடிச் செல்ல வேண்டும்.

புனித ஆஸ்கர் ரொமேரோ கூறினார், ”பிறந்த பாலன் இயேசுவை குடிலில் தேடாதீர்கள்: மாறாக, இரவு உணவின்றி படுக்கைக்குச் செல்லும் குழந்தைகளிடம் தேடுங்கள்”.

நம்முடைய கிறிஸ்துமஸ் புத்தாடைகளிலும், ஆடம்பர குடில்களிலும், சுவையான அறுசுவை உணவுகளிலும் கவனத்தை செலுத்தும் நாம் அந்த சமத்துவ நாயகனின் இறையாட்சி கனவுகளை பல நேரங்களில் மறந்து விடுகிறோம்.

உன் கண்கள் உலகில் நடக்கும் அநீதிக்காக ஒரு துளி நீரை சிந்துமானால் நீயும் ஒரு மகான். நம்முடைய கண்கள் அனாதைகளாக தெருவில் வீசப்பட்டுள்ள குழந்தைகளையும், இடிந்த கூரையைக் கட்ட முடியாமல் வாழும் ஏழைகளையும் தேடட்டும்.

பிறரின் விழி நீர் துடைக்க உங்கள் கரங்கள் கைக்குட்டையானால் உங்கள் வாழ்வு வரலாறாக மாறும். பத்தோடு பதினொன்றாக இந்த கிறிஸ்துமஸ் விழா நமக்கு அமைய வேண்டாம். மாறாக, நம் வாழ்வை வரலாறாக மாற்றும் வெற்றியின் விழாவாக இந்த கிறிஸ்துமஸ் விழா அமையட்டும்.

## சிந்தனைக்கு

1. நம்முடைய அன்பியங்களில் கிறிஸ்துமஸ் விழாக் கொண்டாட முடியாமல் இருக்கக்கூடிய குடும்பங்கள் எத்தனை? அவர்களுக்கு நாம் செய்யும் உதவி என்ன?
2. கிறிஸ்துமஸ் விழாவில் நாம் அடைகின்ற மகிழ்ச்சியை நம்முடைய அண்டை வீட்டாரோடு எந்த விதத்தில் பகிர்ந்துகொள்ளப் போகிறோம்?
3. இந்த கிறிஸ்து பிறப்பில் நம்முடைய பிள்ளைகளின் உடன் பயில்கின்ற ஏழை மாணவர்களை இனம் கண்டு ஒரு புத்தாடையாவது வழங்குவதற்கு முயற்சி செய்வோமா?



# 2 அன்பியமும் கிறிஸ்து பிறப்பும்

அருட்பணி. ஆ. மார்ட்டின்
இயக்குநர், KIDDS

இது திருவருகை காலம். கிறிஸ்துவின் வருகைக்காய் காத்திருக்கும் காலம். இரண்டாம் வருகையை எதிர்பார்த்திருப்பது மட்டுமல்ல. முதல் வருகையான கிறிஸ்துவின் பிறப்பை பொருள் உணர்ந்துக் கொண்டாடி மகிழ தயாரிக்கும் காலம். புறத்தயாரிப்புகளோடு நின்றுவிடாமல் அகத்தயாரிப்பை மேற்கொள்ளும் காலம். கிறிஸ்துவின் பிறப்பை நம் அன்பியங்களில் அர்த்தம் அறிந்து கொண்டாடுவது சிறப்பு ஆகும். வார்த்தை மனுவுருவானார். நம்மிடையேக் குடிகொண்டார் என்பது கிறிஸ்து பிறப்பின் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி.

கிறிஸ்து நம்மிடையே குடிகொண்டார் என்றால் நம்மைத் தேடி வந்தார் என்பது பொருள். பாவ இருள்சூழ் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களுக்கு மன்னிப்பு ஒளியாக வந்தார். பசியால் வாடிய மக்களுக்கு மாட்டுகொட்டிலின் தீவனதொட்டியில் உணவாக வந்தார். நோயால் துன்புற்ற மக்களுக்கு நலம் தரும் அரும் மருந்தாக, குணமளிக்கும் மருத்துவராக வந்தார். அறியாமையில் வாழ்ந்த எளியோருக்கு நற்செய்தியை முழக்கமிட்டு அறிவிக்கும் ஞான கூற்றாக வந்தார். சோர்வுற்ற மக்களுக்கு நம்பிக்கை உணர்வாக வந்தார். ஏங்கித் தவித்த மக்களுக்கு அன்பாக வந்தார். வாழ்விழந்த வறியோருக்கு வாழ்வாக வந்தார். கதியின்றி தவித்தோருக்கு வழியாக வந்தார். பொய்மையில் வாழ்ந்தவருக்கு உண்மை விளக்காக வந்தார். வழிதவறிப் போன மனிதருக்கு நல்லாயனாக வந்தார்.

இந்த ஆண்டு நாம் கொண்டாடும் கிறிஸ்து பிறப்பும் நம்மைத் தேடி கிறிஸ்து வந்தார் என்ற மகிழ்வை. நம்பிக்கையை நம்மோடு வாழும் மனிதருக்குத் தர வேண்டும். காரணம், இயேசு மனுவுருவானார் என்றால் முதலாவதாக, இயேசு மனிதனைத் தேடி வந்தார் என்பது அர்த்தம். ஆனால், நாம் இன்று புகழ், ஆடம்பரக் கொண்டாட்டங்கள், பெரிய குடில்கள், இலட்ச ரூபாய் செலவில் வண்ண விளக்குகள். மதுபான கடைகள், இவற்றைத்தான் கிறிஸ்து பிறப்பின் அடையாளங்களாகத் தேடிச் செல்கிறோம். சகமனிதரை மனிதராக மதிப்பதுக் குறைந்து வருகிறது. இங்கே பொருள்கள் விலையேறிக்கொண்டேப் போகிறது. மனிதன் மலிந்துகொண்டேப் போகிறான் என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான். மனித மாண்பை, மனித நேயத்தை, மனிதர்களை கொண்டாடாத கிறிஸ்துமஸ் வெற்றுக் கொண்டாட்டமே ஆகும். நமது அன்பியத்தில் எல்லாரையும் பங்கேற்க செய்யும் சமத்துவ கிறிஸ்துமஸ் கொண்டாடுவோம். அன்பியத்திற்கு வராதவர்களைத் தேடிச் சென்றுப் பேணிக்காக்கும் ஆயனாய் அழைப்போம். காரணம், கிறிஸ்து மனிதனைத் தேடி வந்தார்.



இரண்டாவதாக, இயேசு மனுவுருவானார் என்றால் அவர் உறவுகளைத் தேடி வந்தார் என்பது அர்த்தம். இயேசுவின் பிறப்பில் வானவர், கால்நடைகள், மற்றும் இடையர்கள் இருந்தனர். இயேசு இறை, மனித மற்றும் இயற்கையோடு உள்ள உறவை மாடிடை குடிலில் வெளிப்படுத்தினார் இன்று சமூக வலைதளங்களில் போலியான உறவைக் கொண்டாடுகிற நாம் நம் வீட்டில் நம் அண்டை

வீட்டில், உறவுகளோடு உறவு பாராட்ட மறந்து விடுகிறோம். பகையை, போட்டியை. பொறாமையை வளர்க்கிறோம். எந்த வீட்டிற்குச் சென்றாலும் இந்த வீட்டிற்கு அமைதி உண்டாகுக என்று வாழ்த்திய சீடர்களைப்போல நமது அன்பியத்தில் எல்லா உறவுகளுக்கும் கிறிஸ்து பிறப்பின் அமைதி செய்தியைச் சொல்வோம். பகைமை மறக்கும். போட்டி மறக்கும் நல்மனதை வெளிப்படுத்துவோம். காரணம், கிறிஸ்து உறவுகளைத் தேடிவந்தார்.

மூன்றாவது. இயேசு மனுவுருவானார் என்றால் ஏழைகளைத் தேடி வந்தார் என்பது அர்த்தம். ஏழை குடிலில் ஏழை குடும்பத்தில் ஏழைகள் நடுவில் ஏழ்மையின் கோலமாய் பிறந்தார். ஏழைகளோடு தன்னை ஐக்கியப்படுத்தினார். ஏழைகளின் துன்பத்தில் துணைநின்றார். ஏழைகளே நீங்கள் பேறுபெற்றோர் என்றார். நமது கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டமும் எழைகளைத் தேடிச் செல்லும் கொண்டாடமாக அமையட்டும். இயேசு பாலன் போல் ஒரு ஏழையாவது நம்மால் பசியாற்றப்பட வேண்டும். இடையர் இயேசுவைச் சந்தித்ததுபோல் ஒரு ஆதரவற்றோர் இல்லமாவதுச் சந்திக்கபட வேண்டும். மூன்று ஏழைக்களுக்காவது மூன்று ஞானிகள் போல் வாழ்வாதாரம் உயர உதவ வேண்டும். காரணம், இயேசு ஏழைகளைத் தேடி வந்தார்.

நமது கிறிஸ்து பிறப்பு அர்த்தமுள்ளதாகட்டும்... இயேசு நம்மோடு மகிழட்டும்...

# 3 அறிந்து அனுபவித்துக் கொண்டாட

அருட்பணி ம. டைட்டஸ் மோகன்

மனிதராய் பிறந்த இயேசுவின் பிறப்பைக் கொண்டாட நம்மையே தயாரிக்கும் இந்நாட்களில் மீட்பரின் பிறப்பிற்கு முன்னும் பின்னும் வரும் காலங்கள், பயன்படுத்தும் அடையாளங்கள்(signs) குறியீடுகள்(symbols) உணர்த்தும் உண்மைகளை அறிந்து அனுபவித்து செயல்படுத்துவது கிறிஸ்து பிறப்பை அர்த்தமுள்ளதாக்கும்.

## 1. காலங்கள் காட்டும் கரிசனைகள்

### திருவருகைக் காலம்

இலத்தீனின் 'adventus' வார்த்தையிலிருந்து வரும் ஆங்கில வார்த்தையான 'Advent' என்பதற்கு 'வருகை' (Coming or arrival) என்று அர்த்தம். இதுவே திருவருகைக்காலம்.

"இயேசுவின் மனித பிறப்பைக் கொண்டாடும் மகிழ்வோடு அவர் மீண்டும் வரும் நாளுக்காக ஆவலுடன் நம்மையே தயார் செய்யும் காலமிது" என்கிறார் தூய அம்புரோஸ்.

### திருவருகைக்கால மலர் வளையம் (Advent Wreath)



தேவதாரு மர கிளைகளால் வட்ட வடிவில் பின்னப்பட்டு, இதன் மீது தேவதாரு குவிச்செதிற்கூடுகளும், மலர்களும், ஐந்து மெழுகுவர்த்திகளும் பொருத்தப்படும். இப்பழக்கம் ஜெர்மனியில் முதலில் துவங்கியது.

பசுமை - நிலைவாழ்வு :

பனிக்காலத்தில் திருவருகைக்காலம் வருவதால் அனைத்து மரங்களும் இலை உதிர்ந்து மொட்டையாகக் காட்சி தரும். எனவே, பசுமைநிற தேவதாரு பயன்படுத்தப்படுகிறது. இது இயேசு நமக்கு வழங்கிய 'நிலைவாழ்வை' எண்பிக்கிறது.

மிளறுகள் - துன்பங்கள் :

தேவதாரு மரத்தின் மிளறுகள் கூர்மையான இலைகளுடன் இருப்பது வாழ்வின் துன்பங்கள், சோதனைகளைக் குறித்துக்காட்டுகிறது.

குவிச் செதிற்கூடுகள் - நம்பிக்கை :

தேவதாரு மர விதைகளைக் கொண்டிருக்கும் தேவதாரு குவிச் செதிற்கூடுகள். இவை போராட்டங்கள், துன்பங்கள், இவ்வுலக கவலைகள் மற்றும் உறுதியற்ற தன்மைகளின் மத்தியில் இயேசுவின் பிறப்பு நம்பிக்கையின் விதையாக உள்ளதைக் குறித்துக்காட்டுகிறது.

ஐந்து மெழுகுவர்த்திகள் :

திருவருகைக்கால நான்கு மெழுகுவர்த்திகளும் நான்கு ஞாயிற்றுக்கிழமைகளில் முறையே ஒவ்வொன்றாகவும், கிறிஸ்மஸ் திருப்பலியில் நடுவில் வைக்கப்படும் ஐந்தாவது மெழுகுவர்த்தியும் ஏற்றி வைக்கப்படும்.

திருவருகைக்கால மெழுகுவர்த்திகள்

முதல் மெழுகுவர்த்தி - கருஞ்சிவப்பு ஊதா நிறம் (Purple Colour) :

'எதிர்பார்ப்பின் மெழுகுவர்த்தி' (Candle of Expectation). இதற்கு முதுபெரும் தந்தை 'ஆபிரகாமின் மெழுகுவர்த்தி' என்ற பெயரும் உண்டு. ஆபிரகாம் எதிர்பார்ப்பின் அடையாளம். அவர் வழியாகவே மண்ணுலகின் மக்கள் அனைவரும் ஆசிபெறுவர்' (தொநூ12: 1-3) என்று கடவுள் சொன்னார். ஆபிரகாம் வழியாக இயேசு வருவார். அவரே உலகின் அனைத்து நாடுகளுக்கும் ஆசியைக் கொண்டு வருவார் என்ற எதிர்பார்ப்பைக் குறிக்கிறது.

இரண்டாவது மெழுகுவர்த்தி - கருஞ்சிவப்பு ஊதா நிறம் :




இது 'நம்பிக்கையின் மெழுகுவர்த்தி' (Candle of Hope) அல்லது எசாயாவின் மெழுகுவர்த்தி. பேரழிவுகளினால் நம்பிக்கையிழந்திருந்த இஸ்ரயேல் மக்களை கடவுள் மீட்டு புதுவாழ்வை அருள்வார் என்ற நம்பிக்கையை மக்களுக்குக் கொடுத்தவர்கள் இறைவாக்கினர்கள். அமைதியை மகிழ்வை மெசியாவின் வருகைக் கொணரும் என்பதை நம்பிக்கையுடன் கண்ணோக்கினார் எசாயா (எசா 11:1-2,6). நம்பிக்கைக் கொடுத்த இறைவாக்கினர்களின் கூட்டத்தை இம்மெழுகுவர்த்தி குறிக்கிறது.

மூன்றாவது மெழுகுவர்த்தி - இளம் சிவப்பு நிறம் (Rose Colour) :

இது 'மகிழ்ச்சியின் மெழுகுவர்த்தி' (Candle of Joy) அல்லது 'திருமுழுக்கு யோவானின் மெழுகுவர்த்தி'. இஞ்ஞாயிறை மகிழ்ச்சியின் ஞாயிறு (Rejoice Sunday) என்கிறோம். தூய திருமுழுக்கு யோவான் மெசியாவாகிய இயேசுவின் வழியை தயாரித்ததால் ஏற்படும் மகிழ்ச்சியை லூக்கா நற்செய்தியாளர் பேசுகிறார். "நீர் மகிழ்ந்து பேருவகை கொள்வீர். அவரது பிறப்பால் பலரும் மகிழ்ச்சியடைவர்" (லூக் 1:14-17).

நான்காவது மெழுகுவர்த்தி - இளம் சிவப்பு நிறம் :

இது 'அன்பின் மெழுகுவர்த்தி' (Candle of Love) அல்லது 'இயேசுவின் பெற்றோர் "அன்னைமரி - யோசேப்பு மெழுகுவர்த்தி" என்றழைக்கப்படுகிறது. இறைவனின் திட்டம் நிறைவேற அன்னை மரியாவும் தூய யோசேப்பும் ஒத்துழைத்ததால் மட்டுமே மனிதராக தம் மகனை உலகிற்கு அனுப்ப கடவுளால்

நிகழ்ந்தது (லூக் 1:30b-31,38). பாலன் இயேசுவின் பிறப்பு கடவுளின் அன்பை மானுடர் நமக்கு கொடுக்கும் உன்னத கொடையாக துலங்குகிறது.

ஐந்தாவது மெழுகுவர்த்தி - வெள்ளை நிறம் :

இது 'கிறிஸ்துவின் மெழுகுவர்த்தி' அல்லது 'வாழ்வின் மெழுகுவர்த்தி' (Candle of Christ or Candle of Life) என்று அழைக்கப்படுகிறது. மெசியாவின் பிறப்பு பூவுலகில் வாழும் அனைவர்க்கும் பாவங்களிலிருந்து விடுதலையையும், இருளிலிருந்து ஒளிக்கும் நம்மை அழைத்துச் சென்று வாழ்வளிக்கும் பிறப்பு என்பதை இம்மெழுகுவர்த்தி உணர்த்துகிறது. 'நான் ஆடுகள் வாழ்வைப் பெறும் பொருட்டு அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன்' (யோவா 10:10) எனும் இயேசுவின் கூற்றிலிருந்து இவ்வுண்மை புலப்படுகிறது.

2. வரலாற்றுப் பிறப்பு வரலாற்றை பகுத்தப் பிறப்பு

வரலாற்று ஆசிரியர்கள் கி.மு 7க்கும் கி.மு 2க்கும் இடைப்பட்ட காலத்தில் இயேசு பிறந்திருக்கலாம் என்கின்றனர். யூதர்களின் பருவகாலம், நாள் காட்டிகள் மூலம் கணக்கிட்டு, ஒரு யூத அடிப்படையில்தான் டிசம்பர் 25 ஆம் தேதி கிறிஸ்துமஸ் பண்டிகையாக கொண்டாடப்படுகிறது என்பது வேறு சில வரலாற்று ஆசிரியர்கள் கூற்று. இயேசு டிசம்பர் 25-இல் பிறந்ததாக கி.பி. மூன்றாவது நூற்றாண்டைச் சேர்ந்த கிறிஸ்தவ எழுத்தாளரும் தேச சஞ்சாரியுமான செக்டுஸ் ஜூலியஸ் அப்ரிகானுஸ் என்பவரால் கி.பி. 221-இல் கிறிஸ்தவருக்காக எழுதப்பட்ட நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நாள் இயேசு கருவில் உருவாகியதாக கருதப்படும் மார்ச் 25 இலிருந்து ஒன்பது மாதங்கள் கடந்த நாளாகும் (மார்ச் 25 - மங்கள வார்த்தை அறிவிப்பு திருநாள்). இங்ஙனம், இயேசு கிறிஸ்து பிறந்த நாள், ஆண்டு குறித்து பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன.

நாசரேத்திலே...

நாசரேத் இஸ்ரயேல் நாட்டின் மிக முக்கியமான நகர். இது வடக்கு இஸ்ரயேலின் வடக்கு மாவட்டத்தில் அமைந்துள்ள பழமை வாய்ந்த நகர். இங்கு திருப்பயணம் மேற்கொள்கையில் நாம் மங்கள வார்த்தைப் பேராலயம், வானதூதர் காட்சி கொடுத்த இடம், யோசேப்பின் தச்சுக்கூடம் மற்றும் மரியாவின் கிணறு ஆகிய நான்கு முக்கிய இடங்களைச் சந்திக்கிறோம்.

பெத்லகேம்

பெத்லகேம் என்ற எபிரேய வார்த்தைக்கு "அப்பத்தின் வீடு". அரமேய மொழியில் "மாமிச வீடு" என்றும் அர்த்தம். பெத்லகேம் இஸ்ரயேல் (பாலஸ்தீனா) நாட்டின் தென்பகுதியான யூதேயாவில் உள்ள ஒரு சிற்றூர். எருசலேமிலிருந்து எட்டு கி.மீ தொலைவில் அமைந்துள்ளது.

இடையர் நிலம்

இடையர்கள் சாமக்காவல் காத்துக் கொண்டிருந்த நிலத்தின் அருகில் ஒரு குகை இருந்தது. குளிருக்காக அந்த குகையில் தங்கி இடையர்கள் காவல் காத்தனர். அப்பொழுதுதான் வானதூதர் காட்சி கொடுத்தார். விவிலிய ஆய்வாளர்கள் கருத்துப்படி, பெத்லகேம் குகையிலிருந்து சுமார் 3000 அடி தொலைவில் இடையர்கள் மகிழ்ச்சியின் நற்செய்தியைப் பெற்றனர். அக்குகையை வைத்து கி.பி. 6-ஆம் நூற்றாண்டில் கோயில் ஒன்றும் கட்டப்பட்டது. கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அதனருகில் ஒரு துறவியர் மடம் கட்டப்பட்டது. இம்மடத்தில்தான் இடையர்களின் கல்லறைகள் உள்ளன.

ஞானிகள் வருகை

ஞானிகள் என்பதன் மூலவார்த்தை 'மாகோஸ்' எனும் கிரேக்க சொல்லாகும். அதற்கு, மாய மந்திரங்களில் ஞானம் பெற்றவர், மந்திரவாதி, கதைகளுக்கு விளக்கம் கொடுப்பவர், மருத்துவர், வான இயல் வல்லுநர் என பல அர்த்தங்கள் உண்டு. கஸ்பர், பல்தசார், மெல்கியோர் என்னும் இம்மூவரும்

வழக்கமாக நாம் கருதுவது போன்று அரசர்கள் அல்ல. இயேசுவிற்கு அவர்கள் கொடுத்த காணிக்கை 'இயேசு யார்?' என்பதை விளக்குவதாகவே அமைந்துள்ளன. 'பொன்' இயேசு அரசர் என்பதையும் 'தூபம்' இயேசு கடவுள், அதாவது பிறந்த குழந்தை இறைவன் என்பதற்காகவும்ளூ செபத்தின் அடையாளமாகவும், மூன்றாவது பொருளான 'வெள்ளைப்போளம்' விண்ணுலகு அரசரான இறைவன் மனிதர் நிலைக்கு தன்னைத் தாழ்த்தி மனிதராக பிறந்ததற்கு அடையாளம் அமைந்துள்ளன.

## 3. மாற்றம் தரும் கிறிஸ்துமஸ் குடிலாவோம்

### கிறிஸ்துமஸ் குடில்

கிறிஸ்துமஸ் என்றாலே நினைவுக்கு வருவது குடில்தான். உலகில் முதன் முறையாக குடில் அமைக்கும் முறையை 1222-ஆம் ஆண்டு இத்தாலி நாட்டு தூய பிரான்சிஸ் அசிசியார்



அறிமுகப்படுத்தினார். இதனை அசிசியார் இங்குள்ள கிரேசியா கிராமத்தைச் சார்ந்த ஜியோனி வெலிட்டா என்பவர் மூலம் பாலன் வேடமிட்ட குழந்தைகளைக் கொண்டும், ஆடு மாடுகளைக் கொண்டும் உயிருள்ள குடிலாக அமைத்தார். இந்த பழக்கத்திற்கு அப்போதைய திருத்தந்தை 3-ஆம் ஹெனோயர் அனுமதி வழங்கினார். தொடர்ந்து வந்த காலங்களில் உலகம் முழுவதும் குடில் அமைக்கும் வழக்கம் உருவானதால், குட்டி உருவப் பொம்மைகளைக் கொண்டு கிறிஸ்மஸ் குடில் அமைக்கும் பழக்கம் நடைமுறைக்கு வந்தது.

### குடிலில் வைக்கப்படும் உருவப்பொம்மைகள்

குடிலின் நடுவில் இயேசுபாலன் திருவுருவ பொம்மையும் இடது மற்றும் வலது பக்கத்தில் அன்னை மரி, யோசேப்பின் திருவுருவமும் இருக்கும். மூன்று இடையர்கள் யோசேப்பின் பின்புறம் இருப்பார்கள். மூவரில் ஒருவர் நடுத்தர வயதுடையவர், கையில் ஆட்டுக்குட்டி ஒன்றை வைத்திருப்பார். மற்றவர் வயது முதிர்ந்தவர், கையில் ஊன்று கோலுடன் நடக்க முடியாமல் நடந்து கொண்டிருப்பார். மூன்றாவது இடையர் கொஞ்சம் வித்தியாசமானவர், இளம் வயதினர். இயேசுவை வணங்க நீண்ட தூரத்திலிருந்து வந்தவர்போல தெரியும். இவரது உடையே அதற்கு சாட்சி. கையோடு ஒரு ஆட்டை இயேசுவுக்குக் காணிக்கையாக

கொண்டு வந்த இவர் உரோமையர் அணியும் காலணியை அணிந்திருப்பார். கழுத்தில் இத்தாலி நாட்டு விவசாயிகள் பயன்படுத்துகிற தொப்பியும் இருக்கும். இந்த 3 இடையர்கள் தவிர மாடு ஒன்றும், கோவேறு கழுதை ஒன்றும் குடிலில் இருக்கும். மாடு இயேசு பிறந்த மாட்டுத் தொழுவத்தில் இருந்தது. கோவேறு கழுதை நாசரேத்தூரிலிருந்து பெத்லகேமுக்கு அன்னை மரியாவை சுமந்து வந்த கழுதை. இவற்றோடு சேர்ந்து இடையர்கள் கொண்டு வந்த ஆடுகளும் குடிலில் இடம்பெறும்.

ஆண்டவரின் திருக்காட்சி திருநாளில் மூன்று இடையர்களுக்கு பதிலாக மூன்று புதிய முகங்கள் தெரியும். அவர்கள்தான் மூன்று ஞானிகள். குடிலின் வாசலில் நிற்கும் ஒட்டகம் ஞானிகள் பயணம் செய்துவந்த வாகனம். குடிலின் முகப்பில் இயேசுவின் பிறப்பை எல்லா மக்களுக்கும் முன்னறிவித்த வானதூதரின் உருவம் தொங்கவிடப்பட்டிருக்கும். கூடுதலாக, கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைகளும், கிறிஸ்துமஸ் மணியும் குடிலில் காணப்படும். குடிலில் அன்னை மரியாளைத் தவிர வேறு இரு பெண்களின் உருவமும் இடம்பெறும். சலோமி, சிலிமி என பெயர் கொண்ட இவ்விருவரும் நிறைமாதக் கர்ப்பிணியாக இருந்த அன்னைக்கு துணையாக பெத்லகேம் சென்றவர்கள். இவ்விருவரும் யோசேப்பின் உறவினர்கள் என்றும், அன்னை மரியாவுக்கு பிரசவம் பார்த்தவர்கள் என்பதும் மரபுவழிச் செய்தி சொல்லப்படுகிறது. பழங்கால ஓவியத்தில் அன்னை மரியின் அருகில் இவ்விருவரும் நிற்கும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.

எதிர்நோக்கின் திருப்பயணிகளாய் வாழ அழைக்கும் யூபிலி ஆண்டில், குடும்பமாக இணைந்து மேற்காணும் மதிப்பீடுகளை உள்ளடக்கி வாழும் குடில்களை அமைப்போம். இதுவே கிறிஸ்துவின் பிறப்பு நம்மிடம் எதிர்பார்ப்பது!

## 4 தூய அந்தோணியார்

அருட்பணி. ஜெனிபர் எடிசன்

செயலர், மாநில இளைஞர் பணிக்குழு

சரல் பங்கின் அன்பியம் பகுதியில் அழகாக அமைந்திருப்பதுதான் பொட்டல் குளம். இந்த குளம் அப்பகுதியின் விவசாய நிலங்களுக்கு நீர்ப்பாசனத்தின் அடிப்படையாக அமைவதோடு குழந்தைகளிலிருந்து வயதானவர்கள் வரை நீராடி மகிழும் குளிர்த்தடாகமாக அப்பகுதியில் நிலத்தடி நீரைப் பாதுகாப்பதும், மரங்களை வளமைப்படுத்துவதும் இந்த குளம்தான். இக்குளத்திலிருந்து ஆழமாக மண்ணை வெட்டியெடுத்து விற்பதற்குத் திட்டமிடுவது உள்ளூர் அரசியல் அதிகாரம். குளத்தில் ஜே.சி.பி. லாரிகள் மணலெடுத்து அணிவகுக்கின்றன. நடக்கப்போகும் அழிவைப் புரிந்துகொள்கின்றனர் அந்த அன்பியத்தார். தங்களின் வாழ்வாதாரமாம் குளத்தைப் பாதுகாக்க அன்பிய வீடுகள் அனைத்தையும் வேகமாகச் சந்தித்து, ஒன்றாகக் கூடி எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். அவ்வன்பியத்திலுள்ள இளைஞர் இயக்க உறுப்பினர் தோழர் ரேசுமா குளம் சூறையாடப்படுவதை காணொளியாகப் பதிவு செய்து வலையொளியில் (You Tube) பதிவிடுகிறார். அந்த அன்பிய சகோதரி திருமதி. மேரி குளோரி வீரத்தோடு ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்தும் தங்கள் தரப்பு நியாயங்களைக் குறித்தும் அதிகாரிகளுடன் வாக்குவாதமிடுகிறார். பங்கின் மற்ற அன்பியங்களும், பெண்கள் இயக்கம் மற்றும் பிற இயக்கங்கள். திருத்தூதுக் கழகங்கள் ஒன்றாய் இணைகின்றனர். அந்த குளம் காப்பாற்றப்படுகிறது. அப்பகுதி மக்களின் வாழ்வுரிமைப் பாதுகாக்கப்படுகிறது.

இதுபோன்று பல்வேறு மனித உரிமைச் செயல்பாடுகள் நம் மறைமாவட்டத்தின் பங்குகளின் அன்பியங்களில் நடைபெற்றுள்ளன. அவற்றில் சிலவற்றைப் பதிவிடலாம்.

1. குடும்ப வன்முறையால் கொலைக் செய்யப்பட்ட பெண்ணிற்கான நீதியைப் பெற அன்பியம் வாரியாக சட்டப் போராட்டம்
2. வழிப்பாதை இல்லாத குடும்பங்களுக்கு வழிப்பாதை உருவாக்க தொடர் செயல்பாடு.
3. தங்கள் ஊரில் மதுக்கடைகள் வேண்டாம் என மதுக்கடைகள் மூட அரசை எதிர்த்துப் போராட்டம்.
4. நிலத்தடி நீரை இராட்சச குழாய்கள் மூலம் உறிஞ்சி வியாபாரம் செய்யும் தண்ணீர் நிறுவனத்திற்கு எதிராக ஆற்றலோடு குரல் எழுப்புதல்.
5. தங்கள் ஊரில் தூய்மையான குடிநீர் பெற துறைசார் அதிகாரிகளை வலியுறுத்துதல்.
6. பெண்குழந்தைக்கு பாலியல் தொல்லைக் கொடுத்தவனை கைதுசெய்து நடவடிக்கை எடுக்க வைத்தல்.

இவ்வாறு நம் அன்பியங்கள் மனித உரிமைச் செயல்பாடுகளில் களம் கண்டு ஒளிர்கின்றன. 1948 ஆம் ஆண்டு டிசம்பர் 10-ஆம் நாளில் பன்னாட்டு மனித உரிமை பிரகடனத்தை ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை ஏற்றுக்கொண்டது. இனம், நிறம், மொழி, பாலினம், அரசியல், சாதி, மதம் போன்றவற்றைக் கடந்து எல்லா மனிதர்களும் சுதந்திரமானவர்கள். உரிமையிலும் மாண்பிலும் ஒருவருக்கொருவர் சமமானவர்கள் என்பதனை உரக்கச் சொல்லி உறுதிப்படுத்தியது இப்பிரகடனம். இப்பிரகடனம் உலகின் பல்வேறு பகுதிகளில் கடைபிடிக்கப்பட்டு வந்த அடிமை அடக்குமுறைகளை உடைத்தெறியும் உளியாய் செயல்பட்டது. இதுவே எல்லா நாடுகளுக்குமான சட்டங்களின் விதையாக அடித்தளமாக அமைந்தது. இதனபடிப்படையில் உருவானதே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாம் பகுதியில் காணப்படுகின்ற அடிப்படை உரிமைகள் (உட்பிரிவு 12-35) சம உரிமை, சுதந்திர உரிமை, சுரண்டலை எதிர்க்கும் உரிமை, சமயசார்பு உரிமை, பண்பாடு மற்றும் கல்வி உரிமை அரசியல் அமைப்பை சீர்படுத்தும் உரிமை போன்ற உரிமைகளை முத்துகளாய் கொண்டிருக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகளை நாம் அறிந்துப் பரவலாக்கம் செய்துச் செயல்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் அவை 2024 ஆம் ஆண்டின் கருப்பொருளாக கொண்டிருப்பது நம் உரிமைகள். நம் வருங்காலம் இப்பொழுதே என்பதாகும். மனித உரிமைகள் தனிமனிதனையும் சமூகத்தையும் நலமான வருங்காலத்தையும் ஆற்றலோடு உருவாக்க கருவியாக செயல்படுகிறது. மனிதஉரிமைகள் தான் நம் சமூகத்தை வன்முறையிலிருந்தும் அடக்குமுறைகளிலிருந்தும் பாதுகாத்து அமைதியானதாகவும், சமமானதாகவும். வளங்குன்றா வளர்ச்சி கொண்டதாகவும் உருவாக்குகிறது. ஐக்கிய நாடுகள் அவையின் பொதுச் செயலாளர் திரு. அன்டோனியோ குட்டரெஸ் மனித உரிமைகள் அமைதியான நீதியான அனைவரையும் உள்ளடக்குகின்ற நலமான சமூகத்தை உருவாக்கும் அடித்தளம் என்றுரைக்கின்றார். எனவே, நாமும் மனித உரிமைகளை முன்மொழிந்த இறையாட்சி சமூகத்தை உருவாக்கும் ஆயுதங்களாகப் பயன்படுத்துவோம்.

சிந்தனைக்கு :

1. அடுத்திருப்பவரின் உரிமைகளை காக்க அன்பியம் செய்ய வேண்டியதென்ன?
2. இந்திய அரசியலமைப்பு சட்டம் தருகின்ற அடிப்படை உரிமைகளை அறிந்திருக்கிறோமா? அதை அறிந்து கொள்ள எத்தகைய முயற்சியை மேற்கொள்ளலாம்?
3. தமது உரிமைகளை அறிந்தவருக்கும் அறியாதவருக்கும் என்னென்ன சமூகப் பாதுகாப்புகள் கிடைக்கும்.

## நலத்திட்டங்கள்
## (முளகுமூடு மறைவட்டம்)

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்ற வர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| தக்கலை | எலியாசியர் அன்பியம் | புற்று நோயாளி | 1 | 1000/- |
| | கார்மல் அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1000/- |
| | அந்தோணியார் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1500/- |
| சிரரயன்குழி | புனித தேவசகயாம் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 500/- |
| | புனித திருமுழுக்கு போவான் அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 500/- |
| விலவூர் | புனித சவேரியார் அன்பியம் | புற்று நோயாளி | 1 | 2000/- |
| | | கல்வி உதவி | 1 | 20000/- |
| மணலிக்கரை | புனித சவேரியார் அன்பியம் | மனவளர்ச்சி குன்றிய முதியோர் இல்லம் | காரோடு | 5,000/- |

## திரித்துவபுரம் மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| திரித்துவபுரம் | சகாயமாதா அன்பியம் | மக்கள் குடில் திட்டம் | 1 | 4000/- |
| சிலுவைபுரம் | 9-வது அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 2000/- |
| காக்கவிளை | தூய வேளாங்கண்ணி அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5000/- |
| வெட்டுவெந்தி | அன்பிய ஒருங்கிணையம் | மருத்துவ உதவி | 1 | 4000/- |
| மேல்பாலை | தூய சகாய மாதா அன்பியம் | மருத்துவ உதவி | 2 | 2700/- |

## புத்தன்கடை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| நாகக்கோடு | புனித அருளானந்தர் அன்பியம் | இருதய அறுவை சிகிட்சை | 1 | 46000/- |
| மாத்தூர் | 2-வது அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 5000/- |
| கடையல் | 15-வது அன்பியம் | மருத்துவ உதவி | 2 | 1000/- |

## மாத்திரவிளை மறைவட்டம்

| பங்கு | அன்பியம் | நோக்கம் | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|---|
| மாத்திரவிளை | புனித டோமினிக் சாவியோ அன்பியம் | ஏழைகள் நலத்திட்டம் | 1 | 9000/- |
| | புனித வளனார் அன்பியம் | ஏழைகள் நலத்திட்டம் | 1 | 1000/- |
| | தேவமாதா அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 5000/- |
| | புனித ஜார்ஜியார் அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 2000/- |
| | புனித லூர்து அன்னை அன்பியம் | மருத்துவ உதவி | 1 | 1000/- |
| | புனித அந்தோணியார் அன்பியம் | பெருஞ்சிலம்பு காப்பகம் | 1 | 2500/- |
| | புனித வின்செண்ட் தே பவுல் அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 3000/- |
| சகாயநகர் | 12-வது அன்பியம் | புற்றுநோயாளி | 1 | 12000/- |
| செந்தறை | 6-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1000/- |
| மாங்கரை | 4-வது அன்பியம் | ஏழைகள் நல உதவி | 1 | 1000/- |
| | 7-வது அன்பியம் | கல்வி உதவி | 1 | 2000/- |

## வேங்காடு மறைவட்ட மாநாட்டில் நல உதவி

| நோக்கம் | | உதவிப் பெற்றவர்கள் | உதவி தொகை |
|---|---|---|---|
| ஏழைகள் நலத்திட்டம் | ஒரு நபருக்கு ரூ. 1,000/- ரொக்கமும், ரூ. 2500/- மதிப்பிலான பொருட்களும் | 20 | 70000/- |

## காரங்காடு மறைவட்ட மாநாடு

16.11.2024, சனிக்கிழமை புனித பனிமய அன்னை ஆலயம், பட்டரிவிளையில் வைத்து ”புதுமை தேடும் குடிமை சமூகம் அன்பியங்கள்” என்னும் சிந்தனையில் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. மறைவட்ட முதன்மை அருள்பணியாளர், மறைமாவட்ட இயக்குநர், மறைவட்ட இயக்குநர், மறைமாவட்ட பணிக்குழுக்களின், அன்பிய பணிக்குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள், அருள்பணியாளர்கள், களப்பணியாரள்கள், 32 பங்கு ஒருங்கிணையங்கள் உட்பட 850 நபர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் கொடியேற்றுதல், கலைநிகழ்ச்சிகள், வாழ்த்துரைகள், மலர் வெளியீடு, நலத்திட்டம் வழங்குதல் ஆகியவை இடம்பெற்றன.

## வேங்கோடு மறைவட்ட மாநாடு

24.11.2024 ஞாயிற்றுக்கிழமை, அன்னை வேளாங்கண்ணி கல்லூரி, தொலையாவட்டம் ”இறையாட்சியின் சமூகமாகிட அன்பியமாய் இணைவோம்” என்னும் சிந்தனையில் மாநாடு சிறப்பாக நடைபெற்றது. மறைவட்ட முதன்மை அருள்பணியாளர், மறைமாவட்ட இயக்குநர், மறைவட்ட இயக்குநர்,

மறைமாவட்ட பணிக்குழுக்களின், அன்பிய பணிக்குழுவின் ஒருங்கிணைப்பாளர்கள், அருள்பணியாளர்கள், களப்பணியாளர்கள், 27 பங்கு ஒருங்கிணையங்கள் உட்பட 860 நபர்கள் பங்கேற்றனர். கூட்டத்தில் சிறப்பு கருத்துரையாளர் அருள்பணி. காட்வின் சௌந்தர் ராஜ் அவர்களின் பயிற்சியும் இடம்பெற்றது. கொடியேற்றுதல், கலைநிகழ்ச்சிகள், வாழ்த்துரைகள், நலத்திட்டம் வழங்குதல் ஆகியவை இடையிடையே அரங்கேற்றி மெருகூட்டினர்.

## புதிய நிர்வாகிகள்

### புத்தன்கடை மறைவட்டம்

| பாரதப்பள்ளி : | | | குலசேகரம்: | | |
|---|---|---|---|---|---|
| தலைவர் | : | திரு. அருள் ததேயுஸ் ராஜ் | தலைவர் | : | திரு. ஜோசப் மைக்கேல் ராஜ் |
| து.தலைவர் | : | திரு. சசி | து.தலைவர் | : | திரு. சதீஷ் |
| செயலர் | : | செல்வி அஸ்மி | செயலர் | : | திருமதி. ரதி றோஸ் |
| து.செயலர் | : | திருமதி. மேரி ஜாய்ஸ் | து.செயலர் | : | திருமதி. பயானா கிறிஸ்டி |
| பொருளர் | : | திரு. லாரன்ஸ் | பொருளர் | : | திரு. விஜயராஜ் |

## பொதுக்காலம் 33-ஆம் ஞாயிறு 17 நவம்பர் 2024

### முந்தினமாத இதழ் தொடர்சி

### பாகம் 3

7. உலக ஏழையருக்கான நாள் தற்போது ஒவ்வொரு திருஅவை சமூகத்துக்கும் பொருந்துபொருளாக மாறியுள்ளது. இது குறைத்து மதிப்பிடப்படக் கூடாத ஒரு வாய்ப்பாகும். ஏனெனில், இது ஏழையரின் விண்ணப்பத்துக்குச் செவிகொடுக்கவும் அவர்களையும் அவர்களுடைய தேவைகளையும் சிந்தையில் கொண்டிருக்கவும் ஒவ்வொரு நம்பிக்கையாளருக்கும் விடுக்கப்படும் ஒரு சவால் ஆகும். இது ஏழையருக்கு உதவுவதற்கான முன்னெடுப்புகளைச் செயல்படுத்தவும் தேவையில் இருப்பவர்களுக்கு உதவுவதற்காகத் தங்களை அர்ப்பணித்துள்ள பல தன்னார்வ பணியாளர்களை அங்கீகரிக்கவும் தகுந்த ஒரு தருணமாகும். நம்மோடு வாழும் மிகவும் ஏழ்மையில் உள்ளவர்களுக்குச் செவிகொடுக்கவும் அவர்களுக்குத் துணைபுரியவும் முன்வந்துள்ள நல்லுள்ளங்களுக்காக நாம் ஆண்டவருக்கு நன்றி சொல்ல வேண்டும் தம்மை நோக்கி மன்றாடுகிறவர்களுக்கு கடவுள் தரும் பதிலுக்குத் தங்கள் சான்று வாழ்வு வழியாக குரல் தருகிற அருள்பணியாளர்கள், துறவியர், இருபால் பொதுநிலையினர் பலர் உள்ளனர். தேவையில் உள்ள ஒருவர் வரவேற்கப்பட்டு ஆதரவு வழங்கப்படும் ஒவ்வொரு முறையும் இறுக்கமான ஒருவகை மௌனம் கலைக்கப்படுகிறது. ஏழையரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள ஏராளம் இருக்கிறது. செல்வத்துக்கு முன்னிடம் தந்து பொருள்செல்வம் என்ற பீடத்தின்மீது மனித மாண்பைப் பலியிடுகிறவர் மத்தியில், ஒரு பண்பாட்டில் வாழ்வுக்கு மிக இன்றியமையாதது முற்றிலும் வேறானது என்று உணர்த்தும் வகையில் எதிர்நீச்சல் போடுகிறவர்கள் ஏழையர்.

ஆகவே, இறைவேண்டல் என்பது சந்திப்பு. அருகாமை ஆகியவற்றில் தன்னை வெளிப்படுத்தும் நேரிய அன்பால் சரிபார்க்கப்படுகிறது. செயல் வடிவம் பெறாத இறைவேண்டல் வீணானது நம்பிக்கையும் செயல் வடிவம் பெறாவிட்டால் தன்னிலே உயிரற்றதாயிருக்கும் (யாக்கோபு 2:17). மறு பக்கத்தில், இறைவேண்டல் இல்லாத பிறரன்பு வெறும் மனிதநேயச் செயலாகத் துவங்கி காலப்போக்கில் மங்கிவிடும் ஆபத்தும் உள்ளது. பிரமாணிக்கமாக வாழத் தகுந்த அன்றாட இறைவேண்டல் இல்லையென்றால் நம் செயல்கள் வெறுமையுற்றவை அவை ஆழமான ஆன்மாவை இழந்து வெறும் செயலாதிக்க நிலைக்குத் தாழ்ந்துவிடும்" (பதினாறாம் பெனடிக்ட் மறைக்கல்வியாக்கம். ஏப்ரல் 25, 2012), நாம் இத்தகைய சோதனையைத் தவிர்த்து. வாழ்வு வழங்கும் தூய ஆவியாரிடமிருந்து வரும் ஆற்றல் விடாமுயற்சி ஆகியவற்றின் உதவியோடு எப்போதும் விழிப்பாய் இருக்க வேண்டும்.

8. இந்த இடத்தில், தம் வாழ்வை ஏழையருக்காய் அர்ப்பணித்த கல்கத்தா நகர் அன்னை தெரசா நமக்கு விட்டுச் சென்றுள்ள சான்றினை நினைவுகூர்வது சிறப்பானதும் அழகானதும் ஆகும். இறைவேண்டல் வழியாகவே கடைநிலையிலுள்ள மக்களுக்கான தம் அறப்பணிகளுக்கு வேண்டிய ஆற்றலும் நம்பிக்கையும் தாம் பெற்றதாக புனித தெரசா அடிக்கடி சொன்னதுண்டு. 1985 அக்டோபர் 26 அன்று அவர் ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றியபோது, தாம் எப்போதும் தம் கரங்களில் வைத்திருக்கும் செபமாலையை எல்லாருக்கும் காட்டி அவர் சொன்னது “நான் இறைவேண்டல் செய்கிற ஓர் ஏழை சகோதரி மட்டுமே. இறைவேண்டல் வழியாக இயேசு தம் அன்பை என் இதயத்தில் பொழிகிறார். அதனையே நான் வழியில் சந்திக்கிற ஏழை மக்களுக்குக் கொடுப்பதற்காகச் செல்கிறேன். நீங்களும் இறைவேண்டல் செய்யுங்கள் இறைவேண்டல் செய்யும்போது உங்கள் அருகிலுள்ள ஏழையர் உங்கள் கண்களில் படுவர். ஒருவேளை நீங்கள் வசிக்கும் வீடு உள்ள தளத்திலேயே அவர்களும் காணப்படலாம். ஒருவேளை உங்கள் வீட்டிலே கூட யாரேனும் ஒருவர் உங்கள் அன்புக்காகக் காத்திருக்கலாம். இறைவேண்டல் செய்யுங்கள். அப்போது உங்கள் கண்கள் திறக்கும் உங்கள் உள்ளம் அன்பால் நிறையும்.

சந்தா மரியா அய் மோந்தி மலைமேலுள்ள புனித மரியா பங்கு கோவிலில் வைத்து வணக்கம் பெறுகிற உடலுக்குச் சொந்தமான புனித பெனடிக்ட் ஜோசப் லாப்ரே (1748-1783) அவர்களை இந்த உரோமை நகரில் எங்ஙனம் நினைவுகூராமல் இருக்க இயலும்? பிரான்சிலிருந்து உரோமைக்கு திருப்பயணம் செய்த அவர் பல மடாலயங்களில் ஏற்கப்படாமல் தம் வாழ்வின் இறுதி நாள்களை ஏழையரோடு ஏழையாகவேக் கழித்தார். கையில் செபமாலையுடன் தூய நற்கருணை முன்பு மணிக்கணக்காக அமர்த்து கட்டளை வேண்டலைச் சொல்வதிலும் புதிய ஏற்பாட்டு நூலையும் கிறிஸ்துநாதர் அதுசாரம் என்ற நூலையும் வாசிப்பதிலும் தம் நேரத்தைச் செலவிட்டார் தங்குவதற்கு இடம் கிடைக்காமல். பாழடைந்து கிடந்த கொளோசேயம் என்ற கட்டிட மூலையில், அலைந்து திரியும் கடவுளின் ஊழியராகப் படுத்து உறங்கினார். தம் வாழ்வு முழுவதையும் இடைவிடா இறைவேண்டலாய் ஆக்கினார். அந்த இறைவேண்டல் கடவுளை நோக்கி எழுந்தது.

9. புனித ஆண்டை நோக்கி நாம் பயணம் செய்யும் நிலையில் நீங்கள் எல்லாரும் நல்ல ஓர் எதிர்காலத்துக்கென்று உறுதியான இலக்கினைக் கொண்ட எதிர்நோக்கின் திருப்பயணிகளாக மாற உங்களை வலியுறுத்துகிறேன். அன்புக்கான சிறு செயல்களை(Gaudetect Exsultate, 145) கடைபிடிக்க மறக்க வேண்டாம் அவையாவன சற்று நிற்றல் அருகில் செல்லுதல் சிறிதளவு கவனம் தருதல், ஒரு புன்னகை ஓர் அரவணைப்பு ஆறுதலான ஒரு வார்த்தை இந்த சைகைகள் தாமாக வருபவையல்ல, அன்றாட அர்ப்பணம் வழியாக வருபவை பெரும்பாலும் அமைதியில் மறைவாய் இருந்து இறைவேண்டலால் வலுவடைபவை. எதிர்நோக்கின் பாடல் மங்கி ஆயுதங்களின் பேரிரைச்சலுக்கும் காயமடைந்த அப்பாவிகள் பலருடைய அழுகைக்கும் போரில் பலியான எண்ணற்ற மக்களின் மௌனத்துக்கும் வழிவிடும் இந்த நேரத்தில் தாம் அமைதிக்கான தம் வேண்டுதலோடு கடவுளிடம் திரும்புவோம் விலைமதிப்பற்ற ஒரு கொடையாய் அமைதியைப் பெறுவதற்காக தம் கரங்களை அகல விரிப்போம் ஏனெனில் இந்த விதத்தில் நாமும் அமைதியை இழந்த ஏழையரே அதே நேரத்தில் அமைதியை மீண்டும் மீண்டெடுக்க நம்மையே அர்ப்பணிப்போம்

10. ஏழைகளோடு ஒன்றுணர்வை வெளிப்படுத்திய இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி ஒவ்வொரு சூழ்நிலையிலும் நாம் ஏழையரின் நண்பர்களாய் இருக்க அழைக்கப்படுகிறோம். பேன்யு என்ற இடத்தில் காட்சி கொடுத்தபோது “நான் ஏழையரின் கன்னி” என்ற மறக்கக் கூடாத செய்தியைத் தந்த இறைவனின் அன்னையாகிய புனிதமிக்க மரியா நம்முடைய இந்தப் பயணத்தில் நாம் உறுதியாயிருக்க நமக்கு உதவுவாராக அவருடைய பணிவான ஏழ்மைக்காகக் கடவுள் கனிவுடன் கண்ணோக்கிய, மேலும் தம் பணிவால் அரும்பெரும் செயல்களை ஆற்றிய அவரிடம் நம் இறைவேண்டல்களை, அவை விண்ணை நோக்கி உயர்ந்து கடவுளால் கேட்கப்படும் என்ற உறுதிப்பாட்டுடன் ஒப்படைப்போம்.

உரோமை புனித ஜான் இலாத்தரான் 11 ஜூன் 2
மழையமின் பாதுகாவலரான பதுவை நகர் புனித அந்தோணியாரின் நினைவு நாள்
திருத்தந்தை பிரான்சிஸ்






## ஞாயிறு வழிபாடு தயாரிப்போம்

| வாரம் | நாள் | முதல் வாசகம் | இரண்டாம் வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | 01.12.2024 | ஏரே. 33 : 14-16 | 1தெச.37:12-4: 2 | லூக். 21 : 25-28,34-36 |
| 2 | 08.12.2024 | பாரூ. 5: 1-9 | பிலி. 1 : 4-6,8-11 | லூக். 13 : 1-3 |
| 3 | 15.12.2024 | செப். 3 : 14-17 | பிலி. 4 :4-7 | லூக். 3 : 10-18 |
| 4 | 22.12.2024 | மீக். 5 : 2-5a | எபி. 10 : 5-10 | லூக். 1 : 39-45 |
| 5. | 29.12.2024 | 1 சாமு.1:20-22,24-28 | 1 யோவா 3:1-2,21-24 | லூக். 2 : 41-52 |

*அடித்தளம் விமர்சனங்கள் வரவேற்கப்படுகின்றன.*

தொடர்புக்கு ...
9487110298, 8870513177

*அன்பிய இயக்குநர்*

அன்பிய பணிக்குழு, ஆயர் இல்ல வளாகம்,
உண்ணாமலைக்கடை - 629 179



காரங்காடு மறைவட்ட அன்பிய
மாநாட்டில் மலர் வெளியிடல்



வேங்கோடு மறைவட்ட
அன்பிய மாநாடு



முளகுமூடு மறைவட்ட
பொதுக்குழு மற்றும் சுற்றுலா

## அன்பிய பணிக்குழு

குழித்துறை மறைமாவட்டம்

## ஜூபிலி ஆண்டு 2025யை முன்னிட்டு

## அன்பிய பணிக்குழு நடத்தும் ஆன்லைன் YouTube வினாடி வினா போட்டி

### வாசிக்கவேண்டிய பகுதிகள்

- திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் எதிர்நோக்கின் பயணிகள்
- இரண்டாம் வத்திக்கான் சங்கம் – திருஅவை, இறைவெளிப்பாடு, திருவழிபாடு, இன்றைய உலகில் திருஅவை
- தேனருவி சமூகத்தொடர்பு பணிக்குழு You Tube வழங்கும் கற்பிக்கும் திருஅவை/இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு (4 மாதங்கள்) https://www.youtube.com/watch?v=usWGgt13ShQ

### குறிப்பு:-

1. ஒரு குடும்பத்திற்கு ஒரு நபர் பங்கேற்கலாம்
2. வினாடி வினா கேள்விகள் 03-01-2025 அன்று You Tube மூலம் கொடுக்கப்படும்.
3. விடைகள் எழுத்து வடிவில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 11-01-2025
4. வந்து சேர வேண்டிய இடம் : மறை மாவட்ட அன்பிய பணிக்குழு அலுவலகம், உண்ணாமலைக்கடை



An ISO 22000:2018 Certified Company
Customer Care : 9488552370
1800 425 8881, 1800 425 8370
25 Years Nanjil
Service with mother's touch
நாஞ்சில் பால்
Nourishes Life
(குழித்துறை மறைமாவட்ட நிறுவனம்)
Nanjil
Cow Milk
പശുവിൻ പാൽ
Butter Milk
CURD
NANJIL Ghee
Enjoy life with ...
Nanjil Idly/Dosai Mavu
NANJIL
MANGO MILK
KULFI
ஐஸ்கிரீம்
fssai
10020042006511
12414009000306
12414009000307
NANJIL INTEGRATED DAIRY DEVELOPMENT
Nanjil Milk Plant
Mulagumoodu & Post - 629 167
Kanyakumari District.
E.mail : nanjilmilk@gmail.com, Website : nanjilmilk.com